## பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

1.0 2017.06.21 ஆந் திகதிய மற்றும் 2024/35 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்ட இலங்கை அரச நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www. doenets.lk என்ற இணையத்தளத்தில் Our Services இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (online) முறை மாத்திரமே அனுப்ப வேண்டும். நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்வது 2025, திசெம்பர் 08 ஆந் திகதி ஆகும். இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும்.

குறிப்பு 1 - நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங் களை ஏற்றுக் கொள்வது 2025, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதுடன் 2025, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.

குறிப்பு 2 - தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனிப்பட்ட ஆவணகோப்பிற்கு உட்செலுத்துவதற்காக தாபன தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதுடன், நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கும் சந்தர்ப்பத்தில் தாபன தலைவரினால் சான்றுரைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

2.0 இப் பரீட்சை பெறுபேறுகளின் படி திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவு செய்யப்படுவார்கள். பரீட்சையை காலம் தாழ்த்துவதற்கு அல்லது இரத்து செய்வதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு. மேலும் நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப் படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

3.0 **சம்பள அளவுத்திட்டம்:** இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் சேவைக்கு ஏற்புடையதான சம்பள குறியீட்டு இலக்கம் MN 3-2025 ஆவதுடன் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 52,250 – 10x800 – 11x1,190 – 10x1,320 – 10x1,350 – 100,040/- ஆகும். இச்சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2027.01.01 இல் இருந்தாகும் அதுவரையில் இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

4.0 இந் நியமனம் நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித் துடையதுமாகும். இப் பரீட்சையின் ஊடாக இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் பின்னர் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர் கட்டுப்படல் வேண்டும்.

5.0 இப் போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீன விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப் படும். பரீட்சையில் தகைமை பெறும் அங்கவீன விண்ணப்பதாரர்களிலிருந்து உயர்மட்ட புள்ளி களிலிருந்து 3% மான விகிதாசாரத்தினர் மட்டும் திறமை ஒழுங்குவரிசையின் பிரகாரம் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவார்கள். இதற்கு தகைமை பெறுவதற்கு பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் கீழ் நூற்றுக்கு நாற்பது வீதம் (40%) விண்ணப்பதாரர்களினால் பெறுதல் வேண்டும். அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 27/88 இன் பிரகாரம் அங்கவீன அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குரியதாகும்.

**குறிப்பு** - நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது உரிய முறையில் அங்கவீன நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பிப்பதாக குறிப்பிடல் வேண்டும் என்பதுடன், அங்கவீனமல்லாத நபரொருவர் பொய்யாக அங்கவீனமென குறிப்பிடக்கூடாது.

6.0 **சேவை நிபந்தனைகள் :**

i. அரசாங்க சேவையில் நியமனங்களை கட்டுப் படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 2024/35 மற்றும் 2017.06.21 ஆந் தினத்தினைக் கொண்ட அதிவிசேட வர்த்த மானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரச நூலகர் சேவை தொடர்பாக சேவைப் பிரமாணக் குறிப்பில் சுமத்தப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அவ் சேவைப்பிரமாணங்களுக்கு செய்துள்ள அல்லது மேலும் செய்யப்படும் அல்லது திருத்தங்களுக்கும் தாபனக்கோவையின் மற்றும் நிதி விதிமுறைகளுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14ஆந் தினத்தினைக் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதியின் கீழ் தெரிவு செய்யப்படும் அபேட்சகரொருவர் சேவையில் தரம் IIIற்கு நியமிக்கப்படுவார்.

ii. திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) ஆண்டுகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவர். அலுவலர் தரம் III இற்கு நியமனம் செய்யப்பட்டு மூன்று (03) ஆண்டுகளுக்குள் சேவை பிரமாணக்குறிப்பின் படி குறித்த முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அலுவலரின் வேலை, வருகை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதாக உள்ளதென திணைக்களத் தலைவர் திருப்தியுறும் பட்சத்தில் மூன்று ஆண்டுகளின் இறுதியில் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிக்கையிட்டதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் திருப்தியுறும் பட்சத்தில் குறித்த அலுவலரின் நியமனம் உறுதிப்படுத்தப்படும்.

iii. முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடகாலம் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் சிறப்புக் காரணங்களின் அடிப்படையில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாதேனும் ஒரு உத்தியோகத்தரை இடம் மாற்றுவதற்கு தேவைப்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.

iv. நீங்கள் நியமனத்துக்காக தகைமைபெற்ற மொழி மூலத்துக்கு அமைவாக 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7.0 **தகைமைகள் :** இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கான பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையனவாகும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(அதற்கமைய 2007.12.08 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.12.08 திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்த திகதி காணப் படுபவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப் பிப்பதற்கு தகைமை காணப்படுகின்றது)

(ஈ) கல்வித் தகைமைகள் :

(i) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ.த) பரீட்சையில் சகல பாடங்களிலும் ( பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(உ) தொழிற்சார் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் தொடர்பான மூன்றாண்டு கால டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் தொடர்பாக மூன்று (03) வருட கால டிப்ளோமா பாடநெறியை சித்தியடைந்திருத்தல்

அல்லது

(iii) நூலகவியல் தொடர்பாக மேற்குறிப்பிட்ட (i) அல்லது (ii) ஆம் தகைமையை விட உயர் தகைமையைப் பெற்றிருத்தல் (அவ்வாறான தகைமைகள் குறித்த பல்கழைக்கழகத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கை நூலகச் சங்கம் ஆகியவற்றில் விசாரித்து இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்)

குறிப்பு :

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

(ii) எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப் பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித் தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகா ரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

8.0 **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். (பூர்த்தி செய்யப்பட்ட தகவல்களின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தியதன் பின்னர் சமர்ப்பித்தல் (submit) வேண்டும்). நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள பொது ஆலோசனை பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதியின் செல்லுபடியான விண்ணப்பப்படிவமென இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக/ ஏற்கப்பட வில்லையென கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தும் கையடக்க தொலைபேசி இலக்கத் திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக்கப்படும்.

(ii) இப்பரீட்சையின் பொருட்டு பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கீழ்க் குறிப்பிடப்படும் கட்டணம் செலுத்தப்படும் வழிமுறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கி அட்டையின் மூலமும் (Any Bank Credit Card)

ii. இணையதளக் கொடுப்பனவு வசதிகள் உள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the facility of internet transaction)

iii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறையின் மூலம் (Online Banking method of bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்படும் முறை தொடர்பான அறிவுரைகள் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாகக் குறுந் தகவலொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு விதித்துரைக்கப்பட்டுள்ள பணத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறை கள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத் தும் போது, ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங் கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூற மாட்டாது.

(இ) பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படுவதற்கு அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றுவதற்கு இயலாது.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பிழையின்றி நிகழ்நிலையின் மூலம் விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையின் ஊடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்படும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அது பற்றி குறிப்பிடப்படும் அறிவித்தலொன்று விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவலொன்றின் மூலம் / இணையதள வெளியிடப்படும். பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் கேட்டறிதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொடரிலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலத் திரனியல் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தங்களிடம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் ஆயத்தமாக வைத்திருப்பதும் பயனுள்ளதாக அமையும்.

(iv) அனுமதிப்பத்திரத்தினை பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின் இலங்கை பரீட்சை திணைக்களத்தினை அழைத்து விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் உரிய திருத்தங்களை செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது திருத்தம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(v) பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண் ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, அரச அல்லது மாகாண சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு அல்லது ஏனைய மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர் அவர்களைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**9.0 பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரரொருவர் அவரின் அனுமதி அட்டையினை பரீட்சை மண்டப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்ப தாரருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்ப தாரருக்கும் உரிய அனுமதிப் பத்திரத்தில் தமது கையெழுத்தினை உறுதிப்படுத்தி முதலாவதாக பரீட்சைக்கு தோற்றும் நாளில், பரீட்சை மண்டப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிகளின் கோவையை இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு:** விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரமொன்றை வெளியிடல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது இப் பதவிக்கான தகைமையை பூர்த்தி செய்வதாக கருதக்கூடாது.

10.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் தமது சுய ஆளடையாளத்தை உறுதிப் படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டும் மூடியிருக்காதவாறு பரீட்சைகள் மண்டபத்திற்குள் உட்செல்லுதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்செல்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்சென்ற நேரம் தொடக்கம் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

11.0 **போலியான தகவல்களுக்கான தண்டனை:**

இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண் ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் போலியானது என அறிந்தே சமர்ப்பித்துள்ளதாக தெரியவருமிடத்து, அல்லது ஏதேனும் விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

12.0 **பரீட்சை நடைமுறை :**

இப் பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்ட மைந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | *பாடம்* | *நேரம்* | *மொத்த புள்ளிகள்* | *சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| (01) | நூலகவியல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| (02) | நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| (03) | பொது அறிவு | 01 மணித்தியாலங்கள் | 100 | 40% |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாட விதானம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைந்துள்ளது.

12.1 (01) **நூலகவியல்**

(1) நூலகங்களும் நூலகத்துவமும்

நூலகங்களும் நூலக வரலாறும், புராதன மற்றும் நவீன உலகத்தின் பிரதான நூலகங்கள்
எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங் கலாக எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும் பரிணாம வளர்ச்சியும்
அச்சிடல் கலையின் ஆரம்பமும், விரிவாக்கமும், நூலக மற்றும் சமூக அபிவிருத்தி விடயங்கள் மீதான தாக்கங்கள்.

நூலகங்களின் வகைகள்

விசேட நூலகம்

அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்கள் சார்ந்த நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள்

கல்விசார் நூலகங்கள்

பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூலகங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள்

பாடசாலை நூலகங்கள்

பொது நூலகங்கள்

பிரிவெனாக்களின் நூலகங்கள் மற்றும் துறவி மட / சமய நிறுவனங்களின் நூலகங்கள்

நூலகக் குழுக்கள் - கட்டமைப்பு, தேவைப் பாடுகள், முக்கியத்துவம் மற்றும் தொழிற்பாடுகள்

நூலக தொழிலுக்குரிய புலமைசார் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின் தொழிற் பாடுகள் : தேசிய மற்றும் சர்வதேச (இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா)

நூலகக் கட்டிடங்கள் - திட்டமிடல், கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

- தற்போதுள்ள கட்டிமொன்றில் நூலகம் ஒன்றை தாபித்தல், அமைத்தல் அல்லது மேம் படுத்தல்.

நூலகப் பொருட்களை பராமரித்தல், பேணிப் பாதுகாத்தல் (Conservation) மற்றும் காப்பீடு (Preservation)

இடர்கள் (Disasters) மற்றும் அனர்த்த முகாமைத்துவம் (Disaster Management)

(2) **அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும்**

நூல்களின் வகைப்படுத்தல் நோக்கங்களும் நன்மை களும்

இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத்திட்டங்கள் : துயி தசமதான பகுப் பாக்கம், சர்வதேச தசமதான பகுப்பாக்கத் திட்டம்

நூலகப் பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்கல் சட்டக் கோவை (AACR) முறைமை

நூல்களைப் பற்றிய விபரங்கள்

AACR 2 விதிமுறைகளைப் பயன்படுத்தி புள்ளி விபரப் பட்டியலைத் தயாரித்தல்.

(3) **நூலக வளங்களும் தகவல் சேவைகளும் :**

பல்வகையான நூலக வளங்கள்

சேகரிப்பு அபிவிருத்தி, சேகரிப்பு அபிவிருத்திக் கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவம்

நூலக வளங்களை தேர்ந்தெடுத்தல் உள்ளடங்கலாக ஏற்புச் செயற்பாடுகள்

(i) நூலக வளங்களை தேர்ந்தெடுத்தலின் கோட் பாடுகளும், மூலங்களும்

(ii) ஏற்புச் செயற்பாடுகள், செயலாக்கம் உட்பட பல்வகையான தொழில்நுட்ப சேவைகள்

(iii) இருப்புக்களின் கணக்கெடுப்பும் அகற்றல் செயற் பாடுகளும்

வெளியீடு, பதிப்புரிமை, தடைகள்

நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள் (Current Awareness Service)

வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

மக்கள் தொடர்பும் நூலகங்கள் தொடர்பான பிரச் சாரங்களும்.

(4) **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்**

நூலகங்களில் கணினிப் பயன்பாடு மற்றும் நூலக சேவைகள் மற்றும் அலுவலகங்களில் தகவல் தொழில்நுட்ப முக்கியத்துவம் மற்றும் பயனுறுதித்தன்மை

- ➢ மேற்படி 4 துறைகளும் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் கட்டமைக்கப் பட்ட கட்டுரை அமைப்பிலான வினாக்களைக் கொண்ட வினாப் பத்திரமாகும். சகல வினாக் களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் மூன்று (03) மணித்தியாலங்கள்

12.2 (02) **நுண்ணறிவுத் தேர்வு**

சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் சிக்கலான வினாக்கள் தொடர்பிலான விண்ணப்பதாரியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகித்தலும் அளவிடுவதிலும் காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக் கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- ➢ இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்ட மைந்த வினாத்தாளாகும். சகல வினாக் களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் ஒரு (01) மணித்தியாலம்

12.3 (03) **பொது அறிவு**

தேசிய, பிராந்திய மற்றும் அனைத்துலக ரீதியான பல அமைப்புக்களைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத் துறை மீதான விண்ணப்பதாரிகளின் பொது அறிவு மற்றும்

விழிப்புணர்வை பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடை யளிக்கப்படுதல் வேண்டும். காலம் ஒரு (01) மணித்தியாலம்

**குறிப்பு:**

நியமனத்திற்கான தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்படடுள்ள புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் , திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை பூர்த்தி செய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையை கட்டாயமாக கடைபிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

13.0 **பரீட்சை பெறுபேறுகள் :**

இவ் அறிவித்தலில் 12.0இன் குறிப்பின் பிரகாரம் ஒவ்வொரு பாடத்துக்கும் 40 வீதத்திற்கு குறையாது பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்டபெறுபேற்று ஆவணம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு வழங்கப்படும். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கியவுடன் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

14.0 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் இணங்கியொழுகுதல் வேண்டும். சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிவதற்கு அவருக்கு நேரிடும்.

15.0 இப் பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படுமாயின் சிங்கள மொழியின் சொற்தொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும், இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

என்.யு.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, நவெம்பர் 03.

11-130/2